**O.S. No. : 97/2016**

Dated: 16.06.2026

**பி.வா.சா.2: சுரேஷ் பாபு; த/பெ. சுவாமி**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

1. வா.சா.ஆ.11 கிரையப்பத்திரத்தை ஏற்படுத்துவதற்கு முன்பு ஏற்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் கிரைய ஒப்பந்த ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட கிரைய ஒப்பந்தம் வாய்மொழி ஒப்பந்தமா அல்லது எழுத்து மூலமான ஒப்பந்தமா என்றால் அது எழுத்து மூலமான ஒப்பந்தம் ஆகும். அவ்வாறு நான் எந்தவித ஒப்பந்தமும் ஏற்படுத்தாமல், ஒப்பந்தம் ஏற்படுத்தியதாக வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையாக அவ்வாறு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருந்தால் அதை இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்திருப்பேன் என்றும், ஏற்படுத்தவில்லை என்பதால்தான் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

2. வா.சா.ஆ.11 கிரையப்பத்திரத்தில் எனக்கு விற்பனை செய்த நபருக்கு 3 சென்ட் பூமி எவ்வாறு பாத்தியப்பட்டது என்பது குறித்து கூறப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. 2013 ஆம் ஆண்டு பிரதிவாதியுடன் ஒப்பந்தம் ஏற்படுத்தியதாக கூறும் நிலையில் நான் மேற்படி சொத்தினை சென்று பார்த்து வந்தேனா என்றால் பார்த்து வந்தேன். நான் அவ்வாறு மேற்படி சொத்தினை சென்று பார்க்கும்போது தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.15-ல் காட்டப்பட்டுள்ள வீடுகள் அங்கு இருந்தனவா என்றால் வீடுகள் இருந்தது, ஆனால் நான் கிரையம் பெற பார்த்த பூமி காலியாகதான் இருந்தது.

3. நான் சொத்தினை பார்க்க சென்றபோது அந்த சொத்தில் ஆழ்துளை குழாய் கிணறு அமைக்கப்பட்டிருந்தது என்றால் சரியல்ல, அமைக்கப்படவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.15 வரிசை புகைப்படங்களில் 3 வது புகைப்படத்தில் உள்ள பச்சை நிறத்தின் வீட்டின் முன் பகுதியில் உள்ள காலி இடம்தான் நான் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் இடம் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.15 வரிசை புகைப்படங்களில் 3 வது புகைப்படத்தில் உள்ள பச்சை நிறத்தில் வண்ணம் அடிக்கப்பட்டுள்ள படிக்கட்டுகளை வாதிதான் அமைத்தார் என்றால் நான் சென்று பார்க்கும்போது அந்த படிக்கட்டுகள் அங்கு இருக்கவில்லை.

4. நான் மேற்படி சொத்தினை கிரையம் பெறுவதற்கு முன்பு மேற்படி படிக்கட்டுகளை வாதிதான் அமைத்தார் என்றால் அதை நான் பார்க்கவில்லை. வாதி ஆரம்பத்தில் இந்த வழக்கினை உறுத்துக்கட்டளை மட்டும் கோரி என் மீதும், பிரதிவாதி சுப்பன் என்பவர் மீதும் தாக்கல் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் 01.04.2016 தேதியில் சொத்தினை கிரையம் பெற்ற நிலையில் அதில் எப்போது வீடு கட்டினேன் என்றால் கிரையம் பெற்ற 2 மாதங்களில் வீடு கட்டி முடித்துவிட்டேன், ஜூன் மாதத்தில் வீடு கட்டி முடித்துவிட்டேன்.

5. அவ்வாறு நான் வீடு கட்டியதற்கு உல்லத்தி பஞ்சாயத்தில் அனுமதி பெற்றுள்ளேனா என்றால் பெறவில்லை. நான் வாதி மீது 24.08.2016 அன்று ஒரு புகார் புதுமந்து காவல் நிலையத்தில் கொடுத்து அதன் பெயரில் குற்ற எண் 173/2016 என்ற எண்ணில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை என்றால் சரிதான். **(அந்த 24.08.2016 தேதியிட்ட புதுமந்து காவல் நிலைய குற்ற எண் 173/2016–ல் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் ஒளி நகல் வா.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

6. அந்த முதல் தகவல் அறிக்கையில் நான் கொடுத்துள்ள புகாரின் அடிப்படையில் 24.08.2016 தேதிக்கு முன்பே நான் கிரையம் பெற்ற பூமியில் வாதி சுற்றுச்சுவர் மற்றும் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்துவிட்டதற்காக நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் 24.08.2016 தேதிவரை மேற்படி கிரையம் பெற்ற பூமியில் எந்தவித கட்டிடமும் கட்டவில்லை என்றும், ஆனால் தற்போது வழக்கிற்காக 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலேயே கட்டிடத்தை கட்டி முடித்துவிட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, நான் கட்டிடத்தை கட்டினேன்.

7. நான் வா.சா.ஆ.11 ஆவணத்திற்கு பிறகு எனது பெயரில் வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்துள்ளதாக கூறும் நிலையில் அது தொடர்பான சிட்டா உள்ளிட்ட ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் கிரையம் பெற்றுள்ள

ஆவணத்தின்படி நான் கிரையம் பெற்ற சொத்தின் உட்பிரிவு எண் 270/6B என்றும், அந்த 270/6B உட்பிரிவானது 13.02.2017 அன்று ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

8. உட்பிரிவு ரத்து செய்யப்பட்டது குறித்து முதல் பிரதிவாதி சுப்பன் என்னிடம் ஏதாவது கூறினாரா என்றால் இல்லை. மேற்படி நான் கிரையம் பெற்ற சொத்தினை விற்பனை செய்த பிறகு எனக்கு விற்பனை செய்த 1 ஆம் பிரதிவாதி சுப்பன் என்பவருக்கு அந்த சொத்தில் எந்தவிதமான உரிமையும் இல்லை என்றால் சரிதான். 13.02.2017 அன்று உட்பிரிவு ரத்து செய்யப்பட்டதை எதிர்த்து 1 ஆம் பிரதிவாதி சுப்பன் மேல்முறையீடு தாக்கல் செய்ததை என்னிடம் கூறினாரா என்றால் இல்லை.

9. நான் தற்போது சாட்சியம் அளிக்க வருவதற்கு முன்பு மேற்படி 270/6B என்ற உட்பிரிவு உள்ளதா அல்லது ரத்து செய்யப்பட்டுவிட்டதா என்பது குறித்து தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன், அந்த உட்பிரிவு இடையில் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்பதை தெரிந்துகொண்டேன். நான் உட்பிரிவு ரத்து செய்யப்பட்டதை தெரிந்துகொண்ட பிறகு அதன் மீது மேல்முறையீடு ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

10. இந்த வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருக்கும்போதே 1 ஆம் பிரதிவாதியும், நானும் எனது ஆள்பலத்தை பயன்படுத்தி தாவா சொத்தில் வீடு கட்டிவிட்டேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது நான் கிரையம் பெறுவதற்கு முன்பு வா.சா.ஆ.15 வரிசை புகைப்படங்களில் உள்ளவாறு இருந்தது என்றும், நான் ஒரு போலியான கிரைய ஆவணத்தை ஏற்படுத்தி அந்த சொத்தில் அத்துமீறி நுழைந்து கட்டிடத்தை உடைத்து கட்டிடம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

11. தாவா சொத்து வாதிக்கு அவரது குடும்ப ஏற்பாட்டின் மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல, அது 1 ஆம் பிரதிவாதியின் சொத்தாகும். வாதி மற்றும் 1 ஆம் பிரதிவாதியின் குடும்பத்தை பற்றியும், அவர்களது குடும்பத்திற்கு எங்கெங்கு சொத்துக்கள் உள்ளது என்பது பற்றியும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதனால் எனக்கு தாவா சொத்து வாதிக்கு குடும்ப ஏற்பாட்டின்படி வந்த

சொத்து அல்ல என்று கூற உரிமை இல்லை என்றால் சரியல்ல.

12. 1 ஆம் பிரதிவாதி தாவா சொத்தில் எந்தவித உரிமையும், அனுபவ சுவாதீனமும் இல்லாமல் தாவா சொத்தினை பொறுத்து எனது பெயருக்கு கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்துள்ள நிலையில், 1 ஆம் பிரதிவாதிக்கு அந்த சொத்தில் உரிமையில்லை என்ற நிலையில் நான் வா.சா.ஆ.11 கிரைய ஆவணம் மூலம் எந்தவித உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல, எனக்கு உரிமை உள்ளது.

13. நானும், 1 ஆம் பிரதிவாதியும் போலியான கிரைய ஆவணத்தின் அடிப்படையில் இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது வாதி கட்டியிருந்த சுற்றுச்சுவர் மற்றும் படிக்கட்டுகளை இடித்துவிட்டு வீடு கட்டியுள்ளதால் மேற்படி கட்டப்பட்ட வீட்டினை இடித்து அகற்றவும், சொத்தின் சுவாதீனத்தை பெறவும் வாதிக்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல, நான் முறைப்படி பத்திரப்பதிவு செய்துதான் வீடு கட்டியுள்ளேன், அதனால் எனக்கு உரிமை உள்ளது.

14. 1 ஆம் பிரதிவாதி வாதியின் மீது உள்ள பொறாமை காரணமாக எனது ஆள்பலத்தினை வைத்து அவருக்கு உரிமை இல்லாத பூமியை எனக்கு எழுதிக்கொடுத்து நாங்கள் இருவரும் கூட்டுச்சதி செய்துதான் வாதி கட்டிய சுற்றுச்சுவர் மற்றும் படிக்கட்டை இடித்து வீடு கட்டியுள்ளோம் என்றும், மேற்படி பூமியில் எங்கள் இருவருக்கும் எந்தவித பாத்தியமும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல, ஆவணப்படி பாத்தியம் உள்ளதால்தான் நான் வீடு கட்டியுள்ளேன். தாவாவில் கோரியுள்ள பரிகாரங்களை பெற வாதிக்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:**</u> இல்லை.

LOGANATHAN PRAKASH

Digitally signed by LOGANATHAN PRAKASH
Date: 2026.06.16 18:10:02 +0530